17.03.2026.
டி.வி.சி.13/2025.
மனுதாரர். அபிநயா, த/பெ.தமிழ்செல்வன்,

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 14.02.2022ம் தேதி திருமணம் நடைபெற்றது. எங்களது திருமணம் இருவீட்டார் சம்மதத்தின்பேரில் செய்யப்பட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு எதிர்மனுதாரர் தரப்பில் எங்களிடம் 10 பவுன் எனக்கு என்றும், எதிர்மனுதாரருக்கு 5 பவுனும் சீர்வரிசையாக செய்யவேண்டும் என்று திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் தரப்பில் வரதட்சணையாக கேட்டார்கள் என்று எனது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் அரசு அதிகாரி ஆவார். எனது தகப்பனார் என்ன படித்துள்ளார் என்றால் பி.எஸ்.சி படித்துள்ளார். திருமண நிச்சயதார்த்தம் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை நவம்பர் மாதம் 2021ம் ஆண்டு நடந்தது. எங்கள் திருமணத்திற்கு சுமார் 3 மாதத்திற்கு முன்பு நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் சரிதான்.

மேலும் எனது மனுவில் ரூ.1,00,000/- மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் திருமணத்திற்கு செய்ததாக எனது மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் மனுவில் மரக்கட்டில் மற்றும் இரும்பு பீரோ சீர்வரிசையாக செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் எதிர்மனுதாரருக்கு முகூர்த்த ஆடைகள் வாங்க ரூ.25,000/-ம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

திருமணத்திற்கு முன்பு 3 மாதத்திற்குள் எதிர்மனுதாரர் தரப்பில் கட்டாயபடுத்தி வரதட்சணை கேட்டதாக சொல்லியுள்ளபோது ஏன் அது குறித்து எனது தந்தை போலிசிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் பொதுவாக வரதட்சணை கெட்பது வழக்கம் என்பதால் என் தகப்பனார் புகார் கொடுக்கவில்லை. நாங்களாக வரதட்சணை கொடுத்தால்தான் அது வழக்கம் என்றாலும், எதிர்மனுதாரர் தரப்பில் கட்டாயபடுத்தியிருக்கும்போது அதனை கொடுக்காமல் தவிர்த்திருக்கலாம் என்றால் ஆரம்பத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் நன்றாக பேசியதால் நாங்கள் வரதட்சணை கொடுத்தோம். நாங்களாக சீர்வரிசை கொடுத்தது அது வரதட்சணை ஆகாது என்றாலும், திருமணத்திற்கான அன்பளிப்பு என்றால் சரியல்ல கட்டாயபடுத்தியதால்தான் நாங்கள் கொடுத்தோம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ.படித்துள்ளேன். திருமணத்திற்கு முன்பு நான் பி.ஏ படித்திருந்தேன். திருமணத்தின்போது எனக்கு என்ன வயது என்றால் 19 ஆகும்.

திருமணத்திற்கு பிறகு நான் என்ன படித்ததேன் என்றால் எம்.ஏ, பி.எட் படித்தேன். திருமணத்தின்போதே எனக்கு எது சரி எது தவறு என்று தெரியும் விவரம் வந்துவிட்டது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரா் வேலைக்கு செல்ல கட்டாய படுத்தியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு 3 நாள் கழித்து எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். அங்கு எத்தனை நாள் இருந்தோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அதன் பிறகு திருநின்றவூரில் உள்ள வீட்டில் எவ்வளவு நாள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 4, 5 மாதங்கள் இருக்கும். அதன் பிறகு பெரம்பூரில் உள்ள வீட்டில் எவ்வளவு நாட்கள் வாழ்ந்தோம் என்றால் 2025 மார்ச் மாதம் வரை நாங்கள் கடைசியாக பிரிவதற்கு முன்பு அங்குதான் வாழ்ந்தோம். திருமணத்திற்கு பிறகு நான் எதிர்மனுதாரருடன் 10 நாட்கள் தான் குடும்பம் நடத்துவேன் என்றாலும் அதன் பின்னர் சொந்தவீடு இருந்தால்தான் சேர்ந்து வாழ்வேன் என்றுகூறிவிட்டு பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல.

மேலும் எதிரிமனுதாரரை தனிகுடித்தனம் கோரி கட்டாய படுத்தினேன் என்றாலும் சரியல்ல, பிரச்சனை வந்ததற்கு பிறகு தனிகுடித்தனம் கேட்டேன். மேலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் திருநின்றவூர் வீட்டில் இருந்தபோது ஆடி மாதத்திற்கு செல்லவேண்டும் என்பதற்காக கடைசி நாளில் எனது பிறந்தநாள் அன்று கேக்வெட்டி கொண்டாடிவிட்டு ஆடி மாத்திற்காக என் பெற்றோர் வீட்டிற்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் தொடர்ந்து நிரூபண வாக்குமூலத்தில் எனது பெற்றோர் வீட்டிலிருந்து வரவேண்டும் என்றால் 2 படுக்கை அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு எடுத்தால்தான் வருவேன் என்று சொன்னதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.ஏ எந்த கல்லூரியில் படித்தேன் என்றால் தென்னாங்கூர் கல்லூரியில் பி.ஏ-வும், சேத்பட் சூரஜ் கல்லூரியில் பி.எட்-ம் படித்தேன். நான் பி.ஏ இருபாலா் கல்லூரியில் படித்தேன் என்றால் சரிதான்.

நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தான் தனது கல்லூரி விரிவுரையாளரிடம் நட்பாக பழகியதை எதிர்மனுதாரர் தவறாக புரிந்துகொண்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் இருபாலர் கல்லூரியில் படித்த விவரம் எதிர்மனுதாரருக்கு தெரியும் என்றால் சரிதான். மற்ற நபர்களுடன் என்னை தொடர்புபடுத்தி பேசியுள்ளாரா என்றால் பேசியுள்ளார். அவ்வாறு எதிர்மனுதாரர் பேசியிருந்தால் அந்த விவரத்தையும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். குறிப்பாக கமலக்கண்ணன் என்ற பெயரை தவிர மற்ற பெயர்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிடவில்லை. எதிர்மனுதாரர் தனது அறிவிப்பில் கமலக்கண்ணன் பெயரை குறிப்பிட்டதால்தான் நான் அந்த பெயரை மட்டும் குறிப்பிட்டேன். எனக்கு எந்த தேதியில் கரு உண்டானது என்றால் தேதி ஞாபகம் இல்லை, குழந்தை பிறந்த தேதிதான் ஞாபகம் உள்ளது. கரு உண்டான தேதி ஞாபகம் இல்லாதபோது எதிர்மனுதாரர் குழந்தைக்கு எதுவும் செய்யவில்லை என்பது மட்டும் ஞாபகம் உள்ளது என்றால் நான் உடன் வாழ்ந்தபோது செய்ததைதான் குறிப்பிட்டேன்.

நான் எதிர்மனுதாரருக்கு சட்ட அறிவிப்பு 07.08.2025ம் தேதி அனுப்பினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பில் உமது அறிவிப்பில் 7வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள்யாவும் பொய்யாகும் என்றும், எனது கட்சிகாரர் உமது கட்சிகாரர் வீட்டில் கூட்டு குடும்பமாக வாழ்ந்த சமயத்தில் எனது கட்சிக்காரர் கர்பம் அடைந்தார் என்றும், அவ்வாறு கர்பம் அடைந்ததால் எனது கட்சிக்காரரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று மருத்துவ சிகிச்சைக்கு அழைத்துச்சென்றது உண்மையாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் என்னுடைய பணத்தில்தான் எதிர்மனுதாரர் அழைத்துச்சென்றார். அந்த அறிவிப்பில் என்னுடைய பணத்தில்தான் மருத்துவ செலவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் சொல்வதுபோல் உண்மையில் என்னுடைய பணத்தில் மருத்துவ செலவு செய்திருந்தால் அதறகான ஆதாரம் மற்றும் பில்களை எனது தரப்பில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல எனக்கு அப்போது எனக்கு அது தோன்றவில்லை. உண்மையில் நான் எநத செலவும் செய்யாததால்தான் என்னிடம் எந்தவித ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. எனது குழந்தையின் முதல் பிறந்தநாள் விழா எங்கு கொண்டாடப்பட்டது என்றால் பெரம்பூர் பார்ட்டி ஹாலில் (மண்டபம்) கொண்டாடப்பட்டது. அந்த பிறந்த நாள் விழாவிற்கான மொத்த செலவினையும் எதிர்மனுதாரர்தான் செய்தார் என்றால் சரிதான்.

எனது குழந்தைக்கு முதல் பிறந்த முடி எங்கே எடுத்தோம் என்றால் திருவள்ளுவர் குலதெய்வம் கோவிலில் மார்ச் 16 2025ம் ஆண்டு எடுத்தோம். அந்த செலவினையும் எதிர்மனுதாரர்தான் செய்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நாங்கள் பிரிந்த மார் 2025ம் தேதி வரை எத்தனை நாட்கள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சில மாதங்கள்தான் வாழ்ந்தோம் ஒரு வருடம்கூட நாங்கள் வாழவில்லை என்றால் சரிதான். 5வது மாதம் வளைகாப்பு எங்கு நடந்தது என்றால் புட்லூர் கோவிலில் எனது தாயார் வீட்டு செலவில் நடந்தது. 9வது மாத வளைகாப்பு பெரம்பூர் பார்ட்டி ஹாலில் ( மண்டபம்) எதிர்மனுதாரர் செலவில் நடந்தது என்றால் சரிதான்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

// **உண்மை நகல்** //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.